# Holiday Assignments

**Tamil Section**

**Subject : Tamil** **Grade: 10** **Medium : Tamil**

❖ விரும்பிய 3 கட்டுரைகள் எழுதுக?

01. அ.விளக்கக் கட்டுரை

இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள். எனவே அவர்கள் நற்பண்புகளும் நல்லியல்புகளும் உடையவராய் வளர்க்கப்படல் வேண்டும். சிறுவர்களுக்கு நற்பண்புகளை வளர்க்கும் இடங்களாக குடும்பம், பாடசாலை, சமய நிறுவனங்கள் என்பன அமைகின்றன. எனவே சிறுவர்கள் நல்லமுறையில் வளர்க்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி **விளக்கக் கட்டுரை** ஒன்று வரைக.

ஆ. விவரணக் கட்டுரை

விஞ்ஞானத்தின் வியத்தகு வளர்ச்சியால் உலகமே சுருங்கிவிட்டது என்றும் ''உலகக் கிராமம்''என்ற எண்ணக் கருவும் எம்மிடையே பரவலாகப் பேசப்பட்டு வருகின்ற ஒரு விடயமாகும். இவ்வாறான உலகமயமாக்கலில் எம்மவர் பல்வேறு நன்மைகளை அனுபவிக்கின்ற போதிலும் குறிப்பிடத்தக்க அளவு பாதிப்புக்களையும் எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றனர் என்பது மறுக்க முடியாத உண்மையுமாகும். அந்தவகையில் உலகமயமாதலின் நன்மை தீமைகளை எடுத்துக்காட்டும் வகையில் ஒரு **விவரணக் கட்டுரை** வரைக. பொருத்தமான தலைப்பிடுக.

இ. உரையாடல்

''சமூகத்தைத் தாங்குகின்ற தூண்கள்'' இளைஞர்களே அவ்வாறான பாரியப் பொறுப்பினை நிறைவேற்ற வேண்டிய இன்றைய இளைஞர்கள் தமக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பின் கனதியை உணராமல் சமுதாயத்தின் சீரழிவுக்குக் காரணமாயிருக்கின்றனர். என்னும் கருத்தினை ஆதரிக்கும் ஒருவருக்கும், அக்கருத்தை எதிர்க்கும் இன்னுமொருவருக்குமிடையே இடம்பெறும் **உரையாடல்.**

ஈ. சொற்பொழிவு

''நரை, திரை, மூப்பு அனுபவத்தின் கிரீடம்'' முதுமை என்பது அனைவருக்கும் பொதுவானது. அது அநுபவத்தின் பொக்கிஷம். சமூகத்தின் நல்வாழ்வுக்கு வழிகாட்டுவது அநுபவமே. அது முதியோரிடம் நிறைந்துள்ளது. எனவே முதியோரை ''சுமை'' எனக் கருதாமல் ''சுகம்''எனக் கருதி அவர்களை வீட்டில் வைத்துப் பராமரிப்போம் என்னும் பொருள்பட நிகழ்த்தப்படும் **சொற்பொழிவு** ஒன்றை 250 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.

உ. சிறுகதை

சிறுவயதிலேயே தந்தையை இழந்த கமலன் தாயுடன் கூடவே பெண் சகோதர உடன்பிறப்புக்களால் குடும்பத்தின் சுமைதாங்கியாகின்றான். இதனால் உறவுகளால் ஒதுக்கிவிட்ப்பட்ட போதும் சிறந்த நட்பினாலும் ஆசிரிய வழிகாட்டலாலும் கல்வியில் உயர்ந்து உலகம் பேசும் நிலையாகின்றான் என்பதைக் கருவாகக் கொண்டு ஓர் **சிறுகதை** எழுதுக. அதற்கு பொருத்தமான தலைப்பிடுக.